**செ. கு. எண்:037** **நாள்: 04.04.2017**

<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K. பழனிசாமி** அவர்களின்</u>

<u>அறிக்கை – 4.4.2017</u>

நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடி வட்டம், சாத்தங்குடி கிராமத்தைச் சேர்ந்த திரு நாகேந்திரன் என்பவரின் மகன் செல்வன் ரோணித் கிருஷ்வான்;

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், தடாகம் கிராமத்தைச் சேர்ந்த திரு ராஜவேல் என்பவரின் மகன் செல்வன் ராகுல் மற்றும் திரு குப்பன் என்பவரின் மகன் திரு ராஜவேல்;

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், பெரியகளட்டூர் கிராமத்தைச் சேர்ந்த திரு ரவி என்பவரின் மகன்கள் செல்வன் விக்ரம் மற்றும் செல்வன் வினித் மற்றும் பிளேஸ்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த திருமதி நாகரத்தினம் என்பவரின் கணவர் திரு சாமுவேல்;

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், புதூர் நாடு, சித்தூர் கிராமத்தைச் சேர்ந்த திரு சின்னபையன் என்பவரின் மகன் திரு. விஜி மற்றும் திரு அருணாசலம் என்பவரின் மகன் திரு .வெங்கட்டராமன்;

ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், புன்னம் கிராமத்தைச் சேர்ந்த திரு மினியப்பன் என்பவரின் மனைவி திருமதி இருளாயி;

-------ஆகியோர் பல்வேறு நிகழ்வுகளில் உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

தூத்துக்குடி மாவட்டம், காயல்பட்டிணம், சிங்கித்துறையைச் சேர்ந்த திரு ஜோதி பர்னாந்து என்பவரின் மகன் திரு அருள் மீன் படி பணியில் ஈடுபட்டிருந்த போது, படகு கவிழ்ந்ததில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம், மெய்யூர் கிராமத்தைச் சேர்ந்த திரு கன்னியப்பன் என்பவரின் மகன் திரு ஆறுமுகம் மற்றும் செய்யூர் வட்டம்,

கடப்பாக்கம் குப்பம் கிராமத்தைச் சேர்ந்த திரு பொன்னுரங்கம் என்பவரின் மகன் திரு வேலு ஆகியோர் மீன் பிடி பணியில் ஈடுபட்டிடுருந்த போது, படகு கவிழ்ந்து உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

ராமநாதபுரம் மாவட்டம், திருவாடானை வட்டம், நம்புதூளை கிராமத்தைச் சேர்ந்த திரு ராமையா என்பவரின் மகன் திரு சக்காத்து மற்றும் திரு ராமு என்பவரின் மகன் திரு பாலு ஆகிய இரு மீனவர்களும் படகு கவிழ்ந்ததில் உயிரிழந்தனர் என்ற செய்தியையும்;

நாகப்பட்டினம் மாவட்டம், கீச்சாங்குப்பம் சுனாமிகுடியிருப்பு பகுதியைச் சேர்ந்த திரு குப்புராஜ் என்பவரின் மகன் திரு சசிகுமார் மீன் பிடி பணியில் ஈடுபட்டிருந்த போது, படகு கவிழ்ந்து உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

படகு கவிழ்ந்து உயிரிழந்த மீனவர்கள் மற்றும் பல்வேறு நிகழ்வுகளில் உயிரிழந்த 15 நபர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K. பழனிசாமி**
**தமிழ்நாடு முதலமைச்சர்**

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**